### கருத்தரங்கச் சுருக்கம் :

தொழில்முறைக் கட்டடக்கலைக் களப்பொறியாளர்களுக்கு நீர் மேலாண்மை பற்றித் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கிக் கூறி, நீர் சேமிப்பினை எவ்வாறு செய்வது என்பதனை அறியச் செய்வது.

### பேசப்படவுள்ள தலைப்புகள் :

- பண்டைய தமிழரின் நீர் மேலாண்மை
- பண்டைய கட்டடங்களின் பராமரிப்பு
- கட்டடக்கலையில் களத்தில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்
- அஸ்திவாரம் எனும் அடித்தளம் அமைத்தல் அதில் ஏற்படுகின்ற களச் சிக்கல்கள்

### கருத்தரங்கத்தின் பயன்கள் :

தொழில்முறைக் கட்டடக்கலைக் களப்பொறியாளர்களுக்கு நீரின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதோடு, பிற்காலத்தில் எவ்வாறு குறைந்த அளவில் நீரினைப் பயன்படுத்தி வலிமையான கட்டடங்களை அமைப்பது என்பதனை விளக்கும்.

**தேசிய ஆலோசனைக் குழு**

தலைவர் : பொறியாளர் **சிவானந்த ராய்,** FIE.,
தலைவர், இந்தியப் பொறியாளர் நிறுவனம், கொல்கத்தா.

துணைத்தலைவர் : முனைவர் **பா. இராஜாராம்,** FIE., தலைவர்
தேசிய மொழிகள் ஊக்குவிப்புக் குழு, இ.பொ.நி.

உறுப்பினர்கள் :
பொறியாளர் **B.S. பிரபாகரா**
பேரா. முனைவர் **S.N. சந்திரசேகரா**
பொறியாளர் **மிலிந்த் ஆனந்த் பதக்**
பொறியாளர் **நிருபேந்திரநாத் பத்வாரி**
பேரா. முனைவர் **பா. இராஜாராம்**
பொறியாளர் **சஜ்ஜன் சிங் யாதவ்**
பொறியாளர் **சலாஹுத்தீன் P.A**
பேரா. முனைவர் **ஷில்பா திரிபாதி**
பொறியாளர் **விஷ்வமோகன் ஜோஷி**
பொறியாளர் **ரகுநந்தன் பிரசாத் சர்மா**

**கருத்தரங்க ஏற்பாட்டுக் குழு**

தலைவர் : பேரா. முனைவர் **பா. இராஜாராம்,** FIE

அமைப்புச் செயலாளர் :
முனைவர் **சீனு. திருஞானம்,** FIE

உறுப்பினர்கள் :
பொறியாளர் **த. உமாபதி,** MIE
பொறியாளர் **கோ. பாஸ்கர்,** MIE
முனைவர் **கோ. விஜயகுமார்,** MIE



### பதிவுக் கட்டணம்

இந்தியப் பொறியாளர் கழகம் மற்றும் பிற தொழின்முறை நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு : **ரூ. 1500/-**
ஆராய்ச்சி மாணவர்கள் / மாணவர்களுக்கு : **ரூ. 500/-**
பதிவுக்கான இறுதி நாள் : **25-09-2023**

### பதிவுக் கட்டணத்தைச் செலுத்த :

பதிவுக் கட்டணத்தை காசோலை / இணைய பரிவர்த்தனை / கூகுள் கட்டண வசதி / Gpay / "The Institution of Engineers (India), Puducherry State Centre" என்ற பெயரில் கேட்போலை மூலமாகத் தங்களுக்கு விருப்பமான முறையில் செலுத்தலாம்.

**For Payments**

Payments are optional through Cheque / NEFT / UPI / G-Pay / Demand Draft, Drawn in favour of "The Institution of Engineers (India), Puducherry State Centre" payable at Puducherry.

### கட்டணம் செலுத்துவதற்கான வங்கி விவரங்கள்

பயனீட்டாளர் பெயர் :
வங்கியின் பெயர் : UCO வங்கி, பெரிய மார்க்கெட், புதுச்சேரி.
கணக்கு எண் : 01300110014608
இந்திய நிதிசார் முறைமைக் குறியீடு IFSC : UCBA0000130
ஒருங்கிணைந்த பரிவர்த்தனைத் தரவு UPI : ioe@ucobank

**Bank Details**

Name of Beneficiary : The Institution of Engineers (India) Puducherry State Centre
Name of Bank : UCO Bank, Grand bazaar, Puducherry
A/c No : 01300110014608
IFSC Code : UCBA0000130,
UPI : ioe@ucobank


### தொடர்புக்கு :

முனைவர் **பா. இராஜாராம்,** FIE., தலைவர்,
இந்தியப் பொறியாளர் நிறுவனம்,
புதுச்சேரி மாநில மையம்,
அலைபேசி : 94437 48471
மின்னஞ்சல் : hodmechanical@mvit.edu.in
radjaram@rediffmail.com

முனைவர் **சீனு. திருஞானம்,** FIE., மதிப்புறுச் செயலர்
இந்தியப் பொறியாளர் நிறுவனம், புதுச்சேரி மாநில மையம்
அலைபேசி : 94433 56700
மின்னஞ்சல் : puducherrysec@ieindia.org
thirou16@gmail.com


# இந்தியப் பொறியாளர் நிறுவனம்

(நிறுவிய ஆண்டு 1920 அரசுச் சாசனத்தில் இணைந்த ஆண்டு 1935)

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம்
நாட்டிற்கான அரும்பணியில் 100 ஆண்டுகள் கடந்த நிறுவனம்

**தேசிய மொழிகள் ஊக்குவிப்புக் குழு,
இந்தியப் பொறியாளர் நிறுவனம், கொல்கத்தா
மற்றும்
இந்தியப் பொறியாளர் நிறுவனம்
- புதுச்சேரி மாநில மையம்**

*இணைந்து நடத்தும்*

**கட்டடக்கலைக்
களப்பொறியாளர்களுக்கான
இந்திய அளவிலான ஒரு நாள்**

# தொழில்நுட்பக் கருத்தரங்கம்

## கருப்பொருள் : நீர் மேலாண்மை

நாள் : 29-09-2023, வெள்ளிக்கிழமை
இடம் : **செண்பகா கன்வென்ஷன் சென்டர்,** புதுச்சேரி.

## இந்தியப் பொறியாளர் நிறுவனம்
## புதுவை மாநில மையம்

எண். 63, நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை,
பொதுப்பணித் துறை வளாகம், புதுச்சேரி - 605 001.

### இந்தியப் பொறியாளர் நிறுவனம் (இ.பொ.நி.)

இந்தியப் பொறியாளர் நிறுவனம் என்பது 15 பொறியியல் துறைகளை உள்ளடக்கிய மிகப்பெரிய பல்துறைத் தொழில்முறை அமைப்பாகும், மேலும் பொறியாளர்களுக்குத் தொழில்முறை ஆர்வத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான உலகளாவிய தளத்தை வழங்கி வருகின்றது. இந்தியப் பொறியாளர் நிறுவனத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 8 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது.

1920 ஆம் ஆண்டு 8, கோகலே சாலை, கொல்கத்தா - 700020 என்ற முகவரியில் உள்ள இந்தியப் பொறியாளர் நிறுவனத்தின் தலைமையகம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 100 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொறியாளர் சமூகத்திற்கு அரும்பணி செய்துள்ளது. இந்தக் காலகட்டத்தில், இது நவீனகாலப் பொறியியல் வரலாற்றுடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது.

1935 ஆம் ஆண்டில், இந்தியப் பொறியாளர் நிறுவனம் பிரிட்டிஷ் அரசுச் சாசனத்தில் இணைக்கப்பட்டது. மேலும், இந்தியாவில் இந்த கௌரவத்தைப் பெற்ற ஒரே தொழில்முறை அமைப்பாகவும் உள்ளது. இன்று, தொழில்சார் சிறப்புக்கான அதன் தேடலானது, உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு மதிப்புமிக்க மற்றும் தொடர்புடைய நிறுவனங்களிலும் பெருமைக்குரிய இடத்தைக் கொடுத்துள்ளது. இந்நிறுவனம் தொழில் முறைப் பொறியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சிப் பணியாளர்களிடையே செயல்படுகிறது. இது அரசு, தொழில்கள், கல்வித்துறை மற்றும் பொறியாளர் சமூகத்திற்குத் தொழில்நுட்ப, தொழில் முறை மற்றும் ஆதரவுப் பணிகளை வழங்குகிறது.

நிறுவனம், நாடு முழுவதும் அமைந்துள்ள 125 மையங்களில் இருந்து செயல்படுகிறது. இந்நிறுவனம் நாட்டின் பல்வேறு இடங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி (R&D) மையங்களை நிறுவியுள்ளது. பொறியியல் பாடங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மேற்கொள்ள அதன் உறுப்பினர்களுக்கு மானிய உதவிகளையும் வழங்குகிறது. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தால் (SIRO) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பொறியாளர் நிறுவனம் அதன் சொந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதோடு பொறியியல் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இளங்கலை/முதுகலை /முனைவர் (UG/PG/PhD) பட்டப்படிப்பு மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குகிறது. இந்தியப் பொறியாளர்கள் சர்வதேசத் தொழில் முறைப் பொறியாளர்களாக (Int. PE) பதிவு மேற்கொள்ள வழி வகை செய்யும் அமைப்பாகவும் செயல்படுகிறது.

### இந்தியப் பொறியாளர் நிறுவனம் புதுச்சேரி மாநில மையம் பற்றி :

இ.பொ.நி, புதுச்சேரி மாநில மையம் 2010 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் நாள் நிறுவப்பட்டது. இது புதுச்சேரிப் பொதுப்பணித் துறையில் செயல் படுகிறது. புதுச்சேரி மாநில மையத்தின் உறுப்பினர்கள் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம், ஆகிய முழு யூனியன் பிரதேசத்திலும் பரவி உள்ளனர். தலைமையகத் தகவலின் படி மொத்தம் 700 -க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். மூன்று நிறுவன உறுப்பினர்கள் (Institutional Members) மற்றும் 25 மாணவர்கள் பிரிவுகளுடன் (Student Chapters) ஆறு பொறியியல் கல்லூரிகளில் 1500 க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது.

இ.பொ.நி, புதுச்சேரி மாநில மையமானது 2023 ஆம் ஆண்டில் மணக்குள விநாயகர் பொறியியல் கல்லூரியில் தென் மாநில மாணவர்கள் மாநாட்டை நடத்தியது. புதுச்சேரி நகரில் காவல் துறையுடன் இணைந்து போக்குவரத்துக் கணக்கெடுப்பு நடத்தி, போக்குவரத்துப் பிரச்சனைக்கான தரவுகளை வழங்கியது, மேலும் அனைத்துச் சட்டப்பூர்வ நாட்களையும் (Statutory Days) சிறப்பாகக் கொண்டாடுதல் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. பட்டைய, இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் மாணவச் செல்வங்களுக்குப் பயிற்சிப் பட்டறைகளை அரசு துறைகளின் ஒத்துழைப்போடு நடத்தி வருகிறது.

### புதுச்சேரி - அறிமுகம்

புதுச்சேரி - புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் தலைநகரமாகும். ஒரு காலத்தில் இந்தியாவில் பிரெஞ்சுக் காலனித்துவப் பேரரசின் தலைமையகமாக இருந்த இந்நகரம் வங்காள விரிகுடாவின் சோழமண்டலக் (கோரமண்டல்) கடற்கரையில் அமைந்துள்ளது. சென்னை விமான நிலையத்திலிருந்து சுமார் 135 கி.மீ தொலைவில் உள்ளது. புதுச்சேரி அமைதியான நகரம். இங்கு பேசப்படும் முக்கிய மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு. இது 'பிரெஞ்சுக் கலாச்சாரத்தின் சன்னல்', 'இந்தியாவின் குட்டி பிரான்ஸ்' மற்றும் 'கிழக்கின் பிரெஞ்சு ரிவியரா' போன்ற பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. புதுச்சேரியில் பிரெஞ்சுத் தூதரகம் உள்ளது. இந்த நகரம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு கோட்டைக்குள் அமைந்த நகரமாகக் கட்டப் பட்டிருந்தது. புதுச்சேரி நகரம் தனித்துவமிக்க திறமையான நகரத் திட்டமிடல் மற்றும் பிராங்கோ தமிழ்க் கட்டடக்கலை நயத்தோடு அமைக்கப் பட்டுள்ளது.

### பார்வையிடச் சிறந்த இடங்கள் :

கடற்கரை மற்றும் காந்தி சிலை, பாரதியார் ஆய்வு மையம், பாரதிதாசன் ஆய்வு மையம், அரவிந்தர் ஆசிரமம், பாண்டி மெரீனா, தாவரவியல் பூங்கா, மணக்குள விநாயகர் கோயில், இருதய ஆண்டவர் கோயில், ஜாமியா மசூதி, சுண்ணாம்பாறு படகு குழாம், ஊசுடு பறவைகள் சரணாலயம், அரிக்கன்மேடு, ஆயிமண்டபம்








